# சென்னை விமான நிலையத்தில் மெட்ரோ ரயில் நேர தகவல் பலகை

**சென்னை, நவ. 16:** விமானத்தில் இருந்து இறங்கி வரும் பயணிகளுக்கு தடையற்ற போக்குவரத்து சேவையை வழங்கும் வகையில், சென்னை விமான நிலையத்தில் மெட்ரோ ரயில் நேரம் தொடர்பான தகவல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கான காட்சிப் பலகைகள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து விமானம் மூலமாக சென்னை விமான நிலையத்துக்கு வரும் பயணிகளுக்கு தடையற்ற போக்குவரத்தைக் கொடுக்க மெட்ரோ ரயில் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, விமானத்தில் இருந்து இறங்கி வரும் பயணிகளுக்கு மெட்ரோ ரயில் இயக்கப்படும் நேரம் தொடர்பாக தகவல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கான காட்சிப் பலகைகள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதன் மூலமாக, பன்னாட்டு விமான நிலையத்துக்கு வந்து இறங்கும் பயணிகளுக்கு மெட்ரோ ரயிலில் திட்டமிட்டு பயணம் செய்ய பேருதவியாக இருக்கும். இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது:

சென்னை விமான நிலையத்தில் மெட்ரோ ரயில் நேரம் தொடர்பாக விவரத்தை காட்சிப்படுத்த கோரிக்கை வைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையை ஏற்று, ரயில் நேரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து மெட்ரோ நிலையங்களிலும் கூடுதலாக,

ரயில் நேரம் தொடர்பாக தகவல்களை காட்சிப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக, மெட்ரோ ரயில் நிலையங்கள் அருகே உள்ள பேருந்து நிறுத்தங்களில் ரயில் நேரம் தொடர்பாக விவரத்தை காட்சிப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.